திரு. இல. பலராமன்: கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய மதிப்பீடு யாது? அது எப்போது ஆரம்பிக்கப்படும்? ஆற்காடு நவாபு காலத்திலேயிருந்து அது அப்படியே இருக்கிறது. பல பேருந்துகள் அந்தத் தடத்திலே செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே விரைவாக அந்தப் பணியைச் செய்வதற்கு அரசு உத்திரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கிடைத்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்படும். அது ஆறு ரீச்சஸ் ஆக பிரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கி. மீ. 0/0—5/0 ரூ. 1,72,000, கி. மீ. 6/0—8/0 ரூ. 85,000, கி. மீ. 8/0—9/4 ரூ. 46,000, கி. மீ. 13/0—15/0 ரூ. 81,000, கி.மீ. 16/0—18/8 ரூ. 1,55,000, கி.மீ. 21/4—24/0 ரூ. 1,00,000. ஆகவே மொத்தம் 6 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. சிறு பாலத்திற்காக 1 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் அளவிலே வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

செய்யாற்றுப் பாலத்தில் சுங்கவரி வசூல்.

*வினா எண் 913—திரு. பாபு ஜனார்த்தனம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1958 முதல் செய்யாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் பாலத்திற்கு 'சுங்கவரி' வசூலிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை இந்த அரசு நீக்கும் உத்தேசம் ஏதும் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) ஆம். 1962-63 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி பாலத்தில் சுங்கவரி வசூலிக்கப்படுகிறது. அரசுக்கு தற்போது அதனை நீக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுங்கவரி வசூலிப்பதால் ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் அரசுக்கு வருகிறது? ஏற்கெனவே செய்யாறு பகுதியிலே இருப்பவர்கள் விவசாயிகள்தானே, ஆகவே

அவர்களுக்கு இச்சப்டிப்பட்ட சிரமங்கள் இருக்கலாமா? ஆகவே நம்முடைய அமைச்சர் அவர்களாவது நடவடிக்கை எடுத்து அதைத் தள்ளுபடி செய்ய ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 1962-63-இல் 16 இலட்சத்து 40 ஆயிரம் செலவிலே அந்தப் பாலம் கட்டப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 46 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இதுவரையிலே வசூலிக்கப்பட்டிருக்கிற தொகை 7 இலட்சத்து 15 ஆயிரத்து 222 ரூபாய். இன்னும் 7 லட்சத்து 19 ஆயிரத்து 716 ரூபாய் வசூலிக்கப்பட வேண்டும். ஆகவே 1962-63-லிருந்து இந்த 20 ஆண்டுக்காலத்திலே சுமார் 7 லட்சம் ரூபாய்தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த தொகை இன்னும் 20 ஆண்டுக்காலத்திலே வசூலிக்கப்பட வேண்டும். ஆகவே நானும் நீங்களும் உயிரோடு இருக்கின்றவரையில் வசூலித்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. விவசாயிகளிடமிருந்து இது வசூலிக்கப்படவில்லை. வாகனங்கள் போகிற நேரத்திலே வசூலிக்கப்படுகின்றன.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, செய்யாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு இருக்கும் இந்தப் பாலத்திலே போகின்ற மாட்டு வண்டிகளுக்காக வசூலிக்கப்படுகிறதா அல்லது லாரி, பஸ் போன்றவற்றிற்கு வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் ஏற்கனவே சொன்னது போல் வாகனங்களுக்கு மட்டும்தான் வசூலிக்கப்படுகிறது.

இரவு நேர லாரி ஓட்டுநர்களுக்காக ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 914—திரு. வே. அரங்கராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவு நேரங்களில் நெடுஞ்சாலைகளில் லாரிகளை ஓட்டிச் செல்லும் டிரைவர்கள் தங்கிச் செல்ல ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. வே. அரங்கராசன் : தலைவர் அவர்களே இரவு நேரங்களிலே லாரிகளை ஓட்டுகின்ற டிரைவர்களுக்கு வசதியாக ஓய்வு விடுதிகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்